செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 140 நாள் : 10/3/17

வேலூர் மாவட்டம்

# பத்திரிக்கை செய்தி

## ஓராண்டிற்குள் பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்புகளை பதிவு செய்ய திருத்தப்பட்ட விதிமுறைகள்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு குறித்த துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.எஸ்.எ.ராமன்,இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்றது. இதில் மரு.செங்கோட்டையன், மாவட்ட பிறப்பு இறப்பு பதிவாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், மரு.கே.எஸ்.டி.சுரேஷ், மாவட்ட கூடுதல் பிறப்பு இறப்பு பதிவாளர் மற்றும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், வேலூர் ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டனர்.

நிகழ்வுற்ற ஓராண்டு கால அளவிற்குள் பதிவு செய்யப்படாத எந்தவொரு பிறப்பு மற்றும் இறப்பு, நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் ஆணையின் அடிப்படையிலும், கால தாமதக்கட்டணம் ரு.10/- செலுத்துவதன் பேரிலும் மட்டுமே பதிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது பிறப்பு, இறப்பு பதிவு விதிகளில் கூறப்பட்ட திருத்தத்தின்படி பிறப்பு, இறப்பு நிகழ்வுற்று ஓராண்டிற்கும் மேலாகியிருந்தால், அதனை பதிவு செய்வதற்கு நீதிமன்றத்திற்கு சென்று அனுமதி பெறுவதற்கு பதிலாக, சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியர் நிலைக்கு குறையாத செயல் நடுவருக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சம்மந்தப்பட்ட பிறப்பு, இறப்பு பதிவாளர் நிகழ்வு நடந்த ஆண்டிலிருந்து மனுதாக்கல் செய்யும் ஆண்டு முடிய உள்ள பதிவேடுகளில் பதிவின்மையை உறுதி செய்த பின்னரே, படிவம் 10-ல் பதிவின்மை குறித்த சான்றிதழை மனுதாரருக்கு வழங்க வேண்டும். செயல் நடுவரின் உத்தரவின்படி நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு நேரிடையாக சென்று விசாரித்து, உண்மை நிலைமையை பிறப்பு, இறப்பு பதிவாளர் கண்டறிய வேண்டும். தவறாக இருப்பின் அனுமதி அளிக்க ஆட்சேபனை செய்ய வேண்டும்.

பிறப்பு, இறப்பு பதிவாளர், பிறப்பு, இறப்பு பதிவு செய்வதற்குண்டான பெயர் மற்றும் இதர விவரங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றுறுதி அலுவலரின் (நோட்டரி பப்ளிக்) சான்றிதழை உரிய படிவத்தில் [படிவம் -1 (பிறப்பு) மற்றும் படிவம் -2 (இறப்பு)] மனுதாரரிடம் பெற்று, சம்மந்தப்பட்ட செயல் நடுவருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பள்ளி சேர்க்கை மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகியவை ஆதாரப்பூர்வ ஆவணங்களாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். பதிவு செய்வதற்கான காலதாமத கட்டணம் ரு.10/-ஐ செலான் மூலம் செலுத்தி, செலுத்துச்சீட்டின் நகலை உத்தரவு பிறப்பிக்கும் செயல் நடுவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்படி நடைமுறைகளை பின்பற்றி ஓராண்டு கால அளவிற்குள் பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்புகளை வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகங்களை அணுகி பதிவு செய்துக் கொள்ளலாம். இது குறித்த கூடுதல் விவரங்களை மாநகராட்சி, நகராட்சி, பேருராட்சி மற்றும் தாலுக்கா அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த கூட்டத்தில் மாவட்ட இணை பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் திருமதி.வி.ஆர்.சுமதி, வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் வட்டார சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

7/3/17
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்,
வேலூர்.

7/3/17
மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

செ.மு.தொ.அ.
வேலூர்- 9.
10/3/17